# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தரமான சோழித்தீன் விற்பனைக்குண்டு. கிலோ 22/- மட்டுமே. இவர் மில், 4ம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (19085)

நல்ல இன முட்டை இடும் கோழிகள், ஆட்டுக்கடா, துலா வசதியுடன் புத்தம் புதிய கமெரா (Olympus) உடன் விற்பனைக்கு உண்டு. 37, டச்சு வீதி, உடுவில். (19095)

முட்டை இடும் கோழிக்குரிய சோழித்தீன் விற்பனைக்கு உண்டு. சாயி செரமிக்ஸ், 157, அர்ச்சுனா வீதி [ஸ்ரான்லி வீதி], யாழ்ப்பாணம். [4449]

ஒரு மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 81/1, (257) கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [19094]

## துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமக்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். அவுஸ்திரேலியாவில் வேலை செய்யும் செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு பெண் தேவை. துர்க்கா திருமண சேவை, வசந்தமதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (4427)

## மணமக்கள் தேவை

43 வயது, இந்து B.Sc ஆசிரியருக்கும், டென்மார்க்கிலுள்ள 33 வயது மணமகனுக்கும், 26 வயது, 7 இல் செவ்வாய் பெண்ணுக்கும், 28 வயது அழகிய பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (19092)

## காணவில்லை

சிவப்பு நிற, ஜேசி இன, "சூரி" என குறியிடப்பட்ட பசுமாடு கலட்டி அம்மன் கோவில் பகுதியிலிருந்து காணாமல் போய் விட்டது. அறிந்தவர்கள் பி. தருமநாயகம், 43/11, கலட்டி, அம்மன் வீதி என்ற விலாசத்திற்கு அறியத்தரவும். (19096)

## ஆய்வுக் கட்டுரை

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு அமைய தட்டச்சு செய்து கொடுக்கப்படும். இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (இ/1095)

## தமிழ் - ரைப்ரைட்டர்

தமிழ் (புதிய விசைப்பலகை) ரைப்ரைட்டர் மற்றும் ஆங்கில Standard - Portables ரைப்ரைட்டர்கள் விற்பனைக்கு உண்டு. Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஷ்ப்றா அருகாமையில்) (இ/1213)

---

# புதிய உயர் கல்லூரி

(NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**G.C.E O/L**

**ஆண்டு 10, 9**

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | சதீர் |
| தமிழ் | — | ரவி |
| வர்த்தகம் | — | மகேன் |
| ஆங்கிலம் | — | கிரிதரன் |
| | | சிவலிங்கம் |
| சமூகக்கல்வி | — | ராஜன் |

[இ-1089]

---

# நாடக அரங்கக் கல்லூரி

நடத்தும்

## G.A.Q. வகுப்புகள்

## "நாடகமும் அரங்கியலும்"

ஆரம்பம்:

**19-01-1992**

3 pm

திரு.க.ஸ்ரீகணேசன்,

இணுவில் கிழக்கு.

(19083)

---

# மில்க்வைற் தொழிலக அறிவித்தல்

சவர்க்கார உற்பத்திக்கு அத்தியாவசிய பிரதம மூலப் பொருளான கோஸ்ரிக்சோடா பெற்றுக்கொள்ள இயலாத காரணத்தினால் தொழிலகம் பிற்பகல் 12-30 மணிவரை மட்டுமே இயங்குகிறது.

தொழிலகத்துடன் தொடர்பு கொள்பவர்களை இவ்வேலை நேர மாற்றத்தை கவனிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

அதிபர்,
மில்க்வைற் தொழிலகம்.

20-12-1991 (சி/1138)

---

# The Jaffna Education Centre

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

**G. C. E. O/L, A/L 92, 93**

SPOKEN ENGLISH
SHORT-HAND TYPING (இருமொழி லிலும்)

★ I.A.B. } ★ G.A.Q } ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள் 28 - 12 - 1991 இல் ஆரம்பமாகின்றன.

"பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு"

(19097)

---

# நொதேண் கல்வி நிலையம்

சுண்டிக்குளி.

## A/L 93

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் Mon. - 6 00 a. m. |
| கணக்கியல் | — | திரு. பிரபாகரன் Mon. - 1 00 p. m. |
| வர்த்தகம் | — | திரு. ரகுநாதன் Mon. - 3 00 p. m. |

**ஆரம்பம்: 23 - 12 - 1991**

(19089)

---

# பிரிந்து சென்ற நாடுகளை அங்கீகரிக்க நிபந்தனை

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்றுள்ள சுதந்திர நாடுகளை அங்கீகரிப்பதற்கு அமெரிக்கா நிபந்தனை விதித்திருக்கிறது.

இச்சுதந்திர நாடுகளிலுள்ள அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன என்பது முதலில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை ஆகும்.

அணு ஆயுதங்களின் பாதுகாப்புக் குறித்து தாம் திருப்தியடையும் பட்சத்திலேயே சுதந்திர நாடுகளை அங்கீகரிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறினார். (இ-எ)

---

# நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

(விவசாயப் பகுதி)

பின்வரும் நாற்றுக்களும், தானியங்களும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

1. தினை கிலோ 25/-
2. குரக்கன் கிலோ 28/-
3. மிளகாய் நாற்று எம். ஐ. 2.
4. சுறி மிளகாய் நாற்று
5. மரவள்ளித் தடி

முகவரி: நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
விவசாயப் பண்ணை (மரதம்)
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(இ-1139)

---

# யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல்-1992

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக் கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01 - 01 - 1992 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கான சுத்த முத்திரையிடப்பட்ட கேள்விகள் எதிர்வரும் 27 - 12 - 1991 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள், குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 100/-உம் செலுத்துவதன் பேரில் 26 - 12 - 1991 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில், இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவங்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு 27 - 12 - 1991 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

தபாலில் அனுப்பப்படும் பட்சத்தில், குறித்த நேரத்தில் ஏற்படும் தாமதத்திற்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் நான்கீழ் இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 17 - 12 - 1991.

அட்டவணை

| குத்தகை விவரம் | குத்தகைக் காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 1 வருடம் | 5000. 00 | 150000/- | — |
| 2. குருநகர் சந்தை | 1 வருடம் | 5000. 00 | 175000/- | — |
| 3. நாவாந்துறை- சந்தை | 1 வருடம் | 2500. 00 | 75000/- | — |
| 4. பாஷையூர் சந்தை | 1 வருடம் | 2500. 00 | 40000/- | — |
| 5. கொட்டடி சந்தை | 1 வருடம் | 2500. 00 | 15000/- | — |
| **இறைச்சிக் கடைகள்:** | | | | |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை, | | | | |
| கடை இலக்கம் - 6 | 1 வருடம் | 2500. 00 | 9375/- | 200. 00 |
| கடை இலக்கம் - 7 | 1 வருடம் | 2500. 00 | 5000/- | 200. 00 |
| **ஆட்டிறைச்சிக் கடை:** | | | | |
| கடை இல. 8 9 | 1 வருடம் | 2500. 00 | 5000/- | 200. 00 |
| **நாவாந்துறைச் சந்தைக் கோழிக் கடை:** | | | | |
| கடை இல. 10 | 1 வருடம் | 2500. 00 | 5000/- | 200. 00 |

[இ-1130]

---

அராலியில் யாழ். மாவட்ட ரீதியில்
7 பேர் கொண்ட

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினால் உழவர் விழாவை முன்னிட்டு, யாழ் மாவட்ட ரீதியில் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற உள்ளது. பங்குபற்றும் கழகங்கள் A, B பிரிவுகளாக பங்குபற்றலாம்.

பிரவேசப் பணம் ரூபா 50/-.

28-12-199 க்கு முன் விண்ணப்பிக்கவும்

தொடர்பு:

செயலாளர்:
அராலி மாவத்தை வி. க., அராலி தெற்கு.
ஐங்கரன் பார்மஸி, அராலி தெற்கு, அராலி
நதியா ஜுவலரி, இல. 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[19093]

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரத்தாயின் மடியில்: | வீர மண்ணில்: |
|---|---|
| 24 | 21 |
| 6 | 12 |
| 1961 | 1985 |



## மேஜர் அல்பேட்

## செல்வன் கந்தையா ரூபதநிதி (ரூபன்)

ஆறு ஆண்டு காலம் ஓடி மறைந்தாலும், உங்கள் அன்பும், நினைவும் எங்கள் மனதைவிட்டு என்றென்றும் மறையாது. இந்நாண்டில் நீ விதைத்த பேரர் விதைகள் நீண்டு எழுந்து வேருன்றி தமிழர் விடுதலையைப் பெற்றெடுக்கும்;

தாய், தந்தை, சகோதரர்கள்,
அண்ணிமார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

(19084)

---

# தொழிற் பயிற்சிகள்

எங்கும் இலகுவாகத் தொழில் வாய்ப்புப் பெற குறைந்த காலத்தில் சிறந்த பயிற்சிகள்:-

O/L பரீட்சை எழுதி முடித்த மாணவர்கள் குறுகிய காலத்தில் வாழ்க்கைக்கு உபயோகமான ஒரு தொழிற் கல்வி கற்க

**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

★ **றேடியோ, T.V., வீடியோடெக் றிப்பெயறிங்**
சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்றுவிக்கப்படும்.
காலம் — 4 மாதம்

★ **றீவைண்டிங்**
மின் மோட்டார், மின்பிறப்பி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்திலிருந்து பயிற்றுவிக்கப்படும்.
காலம் — 3 மாதம்

★ **எலக்றிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வயறிங் வேலைகள், மின்சார உபகரணங்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்றுவிக்கப்படும்
காலம் — 2 மாதம்

★ ***Engineering Drawing***
பொறியியல் பீட 1 ஆம் வருட மாணவர்களுக்கு விசேடமாக பயிற்றுவிக்கப்படுகின்றன.
காலம் — 3 மாதம்

★ ***Special Spoken English with Grammar***
குறுகிய கால தினசரி வகுப்புகள்
காலம் — 2 மாதம்

★ சகல தொழிற் பயிற்சிகளுக்கும் சிறந்த செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.

வகுப்புகள் வார நாட்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் உண்டு.

**மீண்டும் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்:**

**23 - 12 - 1991** (வார நாட்கள்) 9 a.m.
**28 - 12 - 1991** (சனி, ஞாயிறு) 9 a.m.

முக்கிய குறிப்பு:
சகல இன றேடியோ, TV., வீடியோ டெக் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும்.
மேற்படி பொருள்களுக்குரிய I C, ரான்சிஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு:

# JAFFNA TECHNICAL INSTITUTE

52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை, மேல்மாடி)

(19090)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முயற்சி திருவினை தரும்

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை இம்முறை தமிழ்ப் பகுதிகளில் ஒருவாறாக நடந்தேறியுள்ளது. மன்னார் மாவட்டத்தில் பண்டிவிரிச்சானில் பரீட்சை நடந்து கொண்டிருந்த பாடசாலை மீது, விமானப்படையினர் குண்டு வீச்சு நடத்திய சம்பவம் தவிர்த்து, பரீட்சை அநேகமாக, சுமுகமாக இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிப்படையாக, இராணுவ நடவடிக்கைகளையும் போர்ச்சூழ் நிலையையும் காரணம் காட்டியே பரீட்சைப் பகுதி வடக்கு - கிழக்கில் பரீட்சைகளை ரத்துச்செய்து வந்தது. ஆனால் கொழும்பு அதிகாரிகளின் மனங்களில் உள்ளூர இன்னொரு காரணமும் வேரூன்றி இருந்ததாக அறியமுடிகிறது.

அரசாங்க நிர்வாகம் மழுங்கிப் போய் இருக்கும் தமிழ்ப் பகுதிகளில் பரீட்சை வரன்முறைகளுக்கு உட்பட்ட ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன், உரிய அந்தரங்கங்கள், விதிமுறைகள் பேணப்பட்டு அது நடத்தப்படுமா? பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமிக்கப்படும் அதிகாரிகள் நேர்மையுடனும், மனச்சாட்சியுடனும் பணி புரிய அனுமதிக்கப்படுவார்களா? மாணவர்களுக்குச் சாதகமான முறையில் மோசடிகள் நடைபெறா என்பதற்கு என்ன உத்தரவாதம்?— என்பன போன்ற தேவையற்ற சந்தேகங்களும், அழுக்காறினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அச்ச உணர்வுகளும் கொழும்பு அதிகாரிகளிடம் குடிகொண்டிருந்தன.

அத்தகைய ஒரு பின்னணியிலேயே கடைசி நேரம் வரை, டிசம்பர் சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதா அல்லது ஒத்திவைப்பதா என்ற இரட்டை எண்ணத்துடன் பரீட்சைத் திணைக்களக் கொழும்பு அதிகாரிகள் பின்னடித்து வந்தனர்.

அங்குள்ள அதிகாரிகளின் சந்தேகங்களும், தப்பெண்ணங்களும் வெறும் கற்பனையில் எழுந்த விபரீதமான அச்சங்கள் என்பதைக் கொழும்புக்குச் சென்ற உள்ளூர்க் கல்வி அதிகாரிகள் தக்கவாறு விளக்க வேண்டியதாயிற்று. தமிழ்ப் பகுதிகளில் எவ்வித ஊழலும், மோசடியும், தலையீடும் இல்லாமல் பரீட்சைகளை நடத்த முடியும் என்று அவர்கள் கொழும்பு அதிகாரிகளை நம்ப வைத்தார்கள். பரீட்சையை நடத்துவதற்கான பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார்கள்.

வட மாகாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தரை மார்க்கப் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டிருந்த போதிலும், பல மாற்று ஏற்பாடுகளைச் செய்து வினாத்தாள்களையும், பரீட்சைக்கு வேண்டிய காகிதாதிகள் மற்றும் உபகரணங்களையும் தாமே பொறுப்பெடுத்துக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தமட்டில், முதல் ஐந்து நாட்களுக்குரிய வினாத்தாள்கள் மட்டுமே வந்து சேர்ந்தபோது, பரீட்சை இடைநடுவில் நின்று போய்விடுமோ என்ற அச்சம் எல்லோர் மனதிலும் நிலவியது.

ஆனால் உள்ளூர் அதிகாரிகள் அதுவிடயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து, பரீட்சையை முழுமையாகவும் சுமுகமாகவும் நடத்தி முடித்து விட்டார்கள். எந்தக் கஷ்டமான சூழ்நிலையிலும், முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

## நகரை சுத்திகரிக்க சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். நகரப்பகுதியை சுத்திகரிக்க சிரமதான வேலைகள் நாளை முதல் நடைபெற விருக்கின்றன.

யாழ். நகரப் பகுதியில் உள்ள வடிகான்கள் மற்றும் அசுத்த நீர் தேக்கங்கள் சுகாதாரத்துக்கு கேடு ஏற்படுத்துவதை அடுத்து சிரமதானம் மூலம் அவற்றைச் சுத்திகரிக்கும் பணி ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

இன்று மாலை 4 மணிக்கு செயலகத்தில் நடைபெற விருக்கும் கூட்டம் ஒன்றில் இந்தப்பணி குறித்து ஆராயப் படவிருக்கிறது.

சுகாதார, உள்ளூராட்சி திணைக்களங்கள், சமூக நல நிறுவனங்கள், அமைப்புக்களின் அதிகாரிகள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

## வாராந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 21

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வாராந்தக் கருத்தரங்கு நாளை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள முகாமைச் செயலக வேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இவ்வார அமர்வில் எழுத்தாளர் வரதர் "எனது எழுத்துலக வாழ்வு" என்ற பொருளில் கலந்துரையாற்றுவார். (ஒ)

## குருத்துவ வெள்ளி விழா

குருநகர், டிச. 20

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா இன்று சனிக்கிழமை விமரிசையாக நடைபெற உள்ளது.

காலை 7 மணிக்கு யாகப்பர் ஆலயத்தில் நன்றித் திருப்பலியும், மாலை 3 மணிக்கு யாகப்பர் ஆலய மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-5)

## இன்று நடக்கும் உதைபந்தாட்டம்

குருநகர், டிச. 21

மாவீரர் வாரத்தை முன்விட்டு கடற்புலிகளால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று மாலை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஒ-5)

## உணவு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன் துறையில் இருந்து பொருள்களை குடாநாட்டிற்குள் எடுத்து வருவது தொடர்பாக பேச்சுக்கள் நடத்த நாளை மறுதினம் வலி முகாமுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரி மேற்கொள்ளவிருந்த விஜயம், வாறு இறுதிக்கு பின் போடப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. (ஒ-3)

## 'சார்க்'-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இவர்களை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இலங்கைப் பிரதமர் டி. பி. விஜேதுங்கா உட்பட பல அமைச்சர்கள் வரவேற்றனர்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இன்று காலையே கொழும்பு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாடு முடிந்த பின்னர் மாலையில் அவர் தாயகம் திரும்புவார் என்பது தெரிந்ததே. (உ-த)

## இன்று தேர்

சுழிபுரம், டிச. 21

சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை எட்டு மணிக்கு நடைபெறும். நாளை காலை மார்கழி திருவாதிரை தீர்த்தம் இடம்பெறும். [ஒ-28]

★ ★

யாழ்ப்பாணம், டிச. 21

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்த உற்சவமும் (நடேசர் அபிஷேகம்) இடம்பெறும். (ஒ)

## கிழக்கில் வெள்ளம்

கொழும்பு, டிச. 21

கடந்த சில தினங்களாக மட்டக்களப்புப் பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக சித்தாண்டி, கொம்மாந்துறை, மொறக்கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன என்றும், வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், டிச. 21

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்களின் ஜயந்தி விழாவும், சிவானந்த இறுவரி சமய பாடசாலையின் 18ஆவது ஆண்டுவிழா நிகழ்ச்சிகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (இ-3)

## திருவாசக விழா

யாழ்ப்பாணம், டிச. 21

கைதடி அருள்மிகு விராலித்திப் பிள்ளையார் கோவில் திருவாசக விழா நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)

## இந்தியாவிலிருந்து 20 அந்தர் விபூதி

கொழும்பு டிச. 21

தென் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களின் உபயோகத்துக்காக இந்து கலாசார அமைச்சின் கீழ் இயங்கும் இந்து கலாசார நிலையம் இந்தியாவில் இருந்து 20 அந்தர் விபூதியை இறக்குமதி செய்துள்ளது.

50 கிலோ பைக்கெட்டுக்களாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த விபூதி தென் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

தற்போதைய யுத்த நிலையால் வடபகுதியில் இருந்து விபூதி வரத் தவறினாலும், போக்குவரத்துக் கஷ்டங்களினாலுமே தென்பகுதியில் விபூதித் தட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

## கைக்கடிகாரம்

யாழ்ப்பாணம், டிச. 21

சமீபத்தில் யாழ். நகரப் பகுதியில் கண்டெடுத்த கைக்கடிகாரம் ஒன்றை அரியாலையைச் சேர்ந்த திரு. எம். எஸ். குருடி உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (அ)

## தொண்டர் ஆசிரியர்கள் கைதாகினர்!

கொழும்பு, டிச. 21

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் டிக்கோயாவில் இரு தொண்டர் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். மற்றவர் மலையகத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

## மட்டு. வைத்தியசாலை தரமுயர்த்தப்படும்

மட்டக்களப்பு வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப் பட இருக்கிறது.

இதற்கென 46 கோடி ரூபா செலவில் ஆரம்பத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (த)

## சந்திப்பு

யாழ்ப்பாணம், டிச. 21

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள், பயிலுநர்கள் ஆகியோரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில், கலாசாலையில் சமூகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

## இந்திய-பாக் தலைவர்கள் கொழும்பில் பேச்சு

கொழும்பு, டிச. 21

'சார்க்' மாநாட்டிற்காக இன்று கொழும்புக்கு விஜயம் செய்யும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், கொழும்பில் வைத்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-த]

## ஆயுதம்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆயுதங்கள் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆயுதங்களை கப்பலுக்கு மாற்றும் செய்வதற்கு பொறுப்பாக இருந்த — ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த — இடைத்தரகர் ஒருவர், ஆயுதங்கள் ஸ்ரீலங்காவுக்கே அனுப்பப்பட இருந்தன என்று கூறியிருக்கிறார்.

ஆனால் ஹங்கேரி அதிகாரிகள் தவறுதலாக அதனைப் பறிமுதல் செய்திருக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார் என்று சிலிநாட்டு பாதுகாப்பு அமைச்சர் பற்றிசியோ றோஜஸ் தகவல் வெளியிட்டார்.

இந்த விவகாரம் குறித்து ஸ்ரீலங்காவின் வெளிவிவகார இயக்குநர் நாயகம் திரு. நிஹால் றொட்ரிகோவிடம் கேட்டபோது அவர் தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிடம் கேட்டபோது, சம்பந்தப்பட்ட செய்தி குறித்து முழு விவரமும் தெரியாமல் தம்மால் பதில் எதுவும் கூறமுடியாது என்றார்.

ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் இது குறித்து கருத்துக் கூற மறுத்துவிட்டார். (உ)

## உதவி வழங்க--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரைவு தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சார்க் பிரதேசத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் பொருளாதார அடிப்படையில் அமைந்த சிக்கலே காரணம். அந்தச் சிக்கலைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தினால் மற்றைய பிரச்சினைகள் தானாகவே மறைந்து விடும் என்று பிரகடனத்தில் சுட்டிக்காட்டப்படும் என்றும் அறிகிறது.

மேற்குலக உதவிகளை இரண்டாம் பெறுதல், மனித உரிமைகளைப் பேணல் ஆகிய இருவிடயங்களுமே இன்றைய 'சார்க்' மாநாட்டின் முன்னுள்ள முக்கிய விடயங்கள் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-த-3)

அடிப்படை உரிமை மீறல் வழக்கு:

## ரோஹணவின் மைத்துனரை விடுதலை செய்ய உத்தரவு

ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீராவின் மைத்துனரான டாக்டர் சுபாஷ் சந்திர பெர்னாண்டோ உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தது சட்டவிரோதம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

அவருக்கு நஷ்டஈடாக 9 ஆயிரம் ரூபாவையும், நீதிமன்றச் செலவுத் தொகையாக 1,500 ரூபாவையும் வழங்குமாறும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இத்தேவியஸ் அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்ட அவரது பென்ஸ் காரைத் திருப்பிக் கொடுக்கும்படியும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டின் பேரில் அவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், முன்னாள் பாதுகாப்புதுறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, பொலிஸ் மா அதிபர் உட்பட 21 பேர் பிரதிவாதிகளாகக் குறிக்கப்பட்டிருந்தனர். (இ)

## அமைதிப்படைக்கு தூபி; இந்திய அரசு கோரியதா?

### இல்லை என்கிறார் அமைச்சர் ஹேரத்

கொழும்பு, டிச. 21

இலங்கையில் பலியான இந்திய அமைதிகாக்கும் படைவீரர்களுக்கு நினைவுத் தூபி கட்டி எழுப்புமாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசை உத்தியோகபூர்வமாகக் கோரவில்லை.

சபை ஒத்திவைப்பு வேளையில் கொழும்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. நிசால் கிறியல்ல டி சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் வெளியுறவு அமைச்சர் ஹறோல்ட் ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் தகவல்களை எம்.பி. நிசால் கிறியல்ல டி சில்வா எங்கிருந்து தான் பெறுகிறாரோ தெரியாது என்றும் அமைச்சர் தமது பதிலின்போது தெரிவித்தார். (இ)

## ராவ் நேற்றிரவு கோவாவில்!

கொழும்பு, டிச. 21

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உயர்மட்டத் தூதுக் குழுவுடன் நேற்று புதுடில்லியில் இருந்து புறப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதமர் ராவ் நேற்று இரவு கோவாவில் தங்கிவிட்டு, இன்று காலை கொழும்பு வந்தடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-த)

## கலந்துரையாடல் பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற இருந்த "யாழ். குடாநாட்டில் நீர்வளங்கள் சூழல் பேணுதல்" சம்பந்தமான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது. (ஒ)

## நாளை வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சி நாளை நண்பகல் 12.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். (ஒ)

## சிற்றூழியர் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு, டிச. 21

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியின் சத்திரசிகிச்சை அறையில் வேலை செய்யும் ஆஸ்பத்திரி சிற்றூழியரான — செங்கலடியைச் சேர்ந்த தம்பித்துரை சுகுணகுமார் என்பவர் — கடமையில் ஈடுபட்டிருந்தபோது இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-த)

## யார் இந்த வயோதிபர்?

யாழ்ப்பாணம், டிச. 21

வீதியில் அனாதரவாக, சுயநினைவற்ற நிலையில் காணப்பட்ட வயோதிபர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரி 8 ஆம் இலக்க வார்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர், திருகோணமலையைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒரு தடவை சுயநினைவு திரும்பிய சமயம், தனது பெயர் மாணிக்கவாசகர் என்றும் திருகோணமலை என்றவாறாகவும் ஏதோ கூறிக்கொண்டிருந்த வேளையில் மீண்டும் மயங்கி விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

## சோவியத்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தார்.

ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சினின் இன்னொரு ஆணையின்படி சோவியத் ஜனாதிபதிக்குரிய உடைமைகள், சொத்துக்கள் ஆகியனவும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை — சோவியத் யூனியன் என்ற நாடு கலைக்கப்படுவதற்கு முன்னர், சோவியத் நாடாளுமன்றத்தின் அவசரக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி மிகெய்ல் கோர்பச்சேவ் சுதந்திரம் பெற்ற குடியரசுகளைக் கேட்டுள்ளார். (இ-எ)

## முக்கிய பேச்சு ஆரம்பம்

கேப்டவுன், டிச. 21

தென் ஆபிரிக்காவுக்கு புதிய அரசியல் யாப்பு ஒன்றைத் தயாரிக்கும் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி டி கிளார்க் தலைமையிலான அரசாங்கக் குழுவும், ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா தலைமையிலான குழுவும் இப்பேச்சுக்களை நடத்துகின்றன. (த-எ)

## கர்நாடகத்தில் விசாரணை

புதுடில்லி, டிச. 21

கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடத்துவது என கர்நாடக மாநில அமைச்சரவை நேற்று முன்தினம் தீர்மானித்தது. (உ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## ஆண்டு 6இல் அனுமதி பெறுவதற்கான
# பிரவேசப் பரீட்சை - 1992

1992 இல் எமது கல்லூரியில் ஆண்டு 6க்கு அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை 28-12-1991 காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் 24-12-1991-ல் கல்லூரி அலுவலகத்தில் நேரில் வந்து பிரவேசப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி-1133)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ்ப்பாணக் கிளை
# பத்திரிகை எழுத்தாளர் (Journalist) பயிற்சி

மேற்படி பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன: ஆகக் குறைந்த தகைமை க. பொ. த. (சாதாரண) தரத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமைச் சித்தியுட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வகுப்புக்கள் கட்டணம் ஏதுமின்றி வார இறுதி நாட்களில் நடைபெறும். தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துப் பரீட்சை 28 - 12 - 1991 பிற்பகல் 1.30 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டா.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
20 - 12 - 91

(சி-1140)

## 'லில்லி' கப்பலில் தபால்?

நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'லில்லி' கப்பலில் தபால் பொதிகளும் எடுத்து வரப்படலாம் என தெரியவந்தது.

கடந்த பல வாரங்களாக கொழும்பில் இருந்த தபால் பொதிகள் இங்கு எடுத்து வரப்படவில்லை என்பது தெரிந்ததே.

இந்தக் கப்பலில் உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள் போன்றவையும் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# பயிலுனர் ஆசிரியர் சேவை

A/L பரீட்சையில் 3 பாடங்களில்
சித்தியடைந்தவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

வடக்கு - கிழக்கில் அதிக வெற்றிடங்கள்

## போட்டிப் பரீட்சைக்கான
## விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: **28-12-91** மு.ப. 9 மணி

பாடநெறி:-
1. பொது உளச்சார்பு 2. பொது அறிவு

தகைமைகள்:- 18 — 35 வயதிற்கு இடைப்பட்ட க. பொ. த. உ/த பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி.

விண்ணப்ப முடிவு திகதி: 06 - 01 - 1992

விண்ணப்பப் படிவங்களையும் விவரத் திரட்டினையும் நேரில் பெறலாம்.

★ இலவச பாடக் குறிப்புகள்
★ விரிவுரைகள் - சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
★ கட்டணம் ரூபா 290.00 [முழுப் பயிற்சிக்கும்]

# அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-1080)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பொன்னையா

(Ford Rhodes, Thornton & Co)
(யாழ். கிளை முகாமையாளர்)

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21-12-1991) காலை 9 மணிக்கு அன்னாரது கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பிறேம்குமார் [மகன்]

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(19152)

## பொன்னையா பரமானந்தம்

இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கோட்டைப்புரம் பொன்னையா பரமானந்தம் [ஓய்வுபெற்ற லிகிதர், இலங்கை வங்கி] 17-12-91 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லாச்சி தம்பதிகளின் மகனும், கந்தையா - சின்னக்குட்டி தம்பதிகளின் (கதமலை) மருமகனும், இரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பிரபலாதா [ஜேர்மனி], அரவிந்தா [கனடா], யசோதா [ஆசிரியை, மெதோடிஸ்ட் ஆங்கில பாடசாலை], ராதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான E. P. ரகுநாத் [கொழும்பு], தர்மதாசா [மலேசியா], புத்திரசிகாமணி [மலேசியா], சின்னையானந்தம் [மலேசியா], செல்வானந்தம் [மலேசியா], மற்றும் வர்க்கரசி, பரமேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் சகோதரனும், இந்திராணி [ஜேர்மனி], ஞானதேவி [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரி, சிவஞானம் [U. K.], சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான செல்லையா (ஆசிரியர்), நித்தியானந்தன் [Water Works] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 18-12-91 அன்று இருபாலையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி

கதமலை கிழக்கு,
மாவிட்டபுரம்.

(18962)

## திருமதி கதரீன் குணரத்தினம் சவுந்தரநாயகம்

திருமதி கதரீன் குணரத்தினம் சவுந்தரநாயகம் காலமானார். இவர் திரு. சவுந்தரநாயகத்தின் மனைவியும், இரட்ணம், சகுந்தலா ஆகியோரின் சகோதரியும், ஜெயபாலசுப்பிரமணியத்தின் மாமியாரும், சுபேந்திரி ஞானேந்திரன், சுபேஷினி நிறஞ்சன், ஹரிசா, வாசுகி ஆகியோரின் பேத்தியும், நீரஜ், திரேசா, ஆர்த்தி ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற அம்பிரட் சிற்றம்பலம், காலஞ்சென்ற டாக்டர் பாபு சிற்றம்பலம், காலஞ்சென்ற திருபதி தில்லைலிங்கம், நல்லப்பர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை தெகிவளை மயானத்தில் 21-12-91 பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
திரு. சவுந்தரநாயகம்

தெகிவளை.
[18963]

## திருமதி கமலநாயகி குமாரசாமி

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கமலநாயகி குமாரசாமி 20-12-1991 நேற்றுக் காலமானார். இவர் குமாரசாமியின் (இளைப்பாறிய ஓவசியர்) மனைவியும், பூபதிமினி [ஆசிரியை, மட்டுவில் சரஸ்வதி ம. வி.], வனஜா [C. D. B. - கொழும்பு], இ. நிர்மலா, வெங்கடேசன் [கனடா], செந்தில்வாசன் [U. K.] ஆகியோரின் தாயாரும், சந்திரசேகரன் (Malship (C'y) Ltd.), இராஜேஸ்வரன் [கட்டுமானம்] ஆகியோரின் மாமியாரும், சுரேந்திரன், துளசி, ஐஸ்வர்யா ஆகியோரின் பேத்தியும், திருமதி சரோஜினிதேவி துரைராசாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-12-91) பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. குமாரசாமி
(கணவன்)

'கமலவாசா',
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி

[18964]

## திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை

வலைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் வி. கணபதிப்பிள்ளையின் மனைவி பொன்னம்மா காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற பிரதம கல்வி அதிகாரி பாலசுப்ரமணியம், பத்மாசினி, அருணாமூர்த்தி (கனடா), தவமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயும், ஓய்வுபெற்ற அதிபர் பொ. கணபதிப்பிள்ளை, ஓய்வுபெற்ற அதிபர் சந்திரசேகரம், விஜயலட்சுமி (கனடா), செ. கணபதிப்பிள்ளை, உப அதிபர், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கண்டுக்குளியில் நடைபெறும்.

தகவல்:
செ. கணபதிப்பிள்ளை
க. பாலசுப்ரமணியம்

18, கண்டி வீதி,
சுண்டுக்குளி

(18965)

# யூனிவேர்சல்

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## 1992 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை சேர்த்தல் பற்றிய
# அறிவுறுத்தல்கள்

1) 5, 6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான
## புதிய பிரிவுகள் யாவும்
## 05 - 01 - 1992 ஞாயிறு ஆரம்பமாகின்றன.

ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியுமாதலால் மாணவர்கள் தங்கள் அனுமதியை முன்கூட்டியே உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரத்தில் எமது நிறுவனத்தில் சமுகமளித்து தமது அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

| ஆண்டு | காலம் | நேரம் |
|---|---|---|
| 5 | 23 - 12 - 1991 | காலை 7-30 மணி |
| 6 | 23 - 12 - 1991 | காலை 8-30 மணி |
| 7 | 23 - 12 - 1991 | மு.ப. 9-30 மணி |
| 8 | 23 - 12 - 1991 | மு.ப. 10-30 மணி |
| 9 | 23 - 12 - 1991 | மு.ப. 11-30 மணி |
| 10 | 23 - 12 - 1991 | பி.ப. 2-30 மணி |
| 11 | 23 - 12 - 1991 | பி.ப. 3-30 மணி |

வகுப்புக்கள் யாவும் மாணவர்களின் வசதிக்கு ஏற்ப வெவ்வேறு பிரிவுகளாக நடத்தப்படும். நேர சூசிகைகள் 23 - 12 - 1991 அன்று வழங்கப்படும்.

2) க. பொ. த. உயர்தரம் 93ஆம் ஆண்டிற்கான கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்

| | | |
|---|---|---|
| புதிய வகுப்புக்கள் யாவும் | 21 - 12 - 91 [சனி] | ஆரம்பமாகும். |
| கலை, வர்த்தகப் பிரிவு | 21 - 12 - 91 | காலை 6-15 மணி |
| விஞ்ஞானப் பிரிவு [கணிதம், உயிரியல்] | 21 - 12 - 91 | பி.பகல் 2-30 மணி |

அதிபர்,
யூனிவேர்சல்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-1138)

## C. C. A.
யாழ்ப்பாணம்.

கிறிஸ்தவ நாகரிகம்
கொலின்ஸ்

1991 வினா-விடை
1992, 1993
புதிய பிரிவு
ஆரம்பம்:
23-12-1991
திங்கள் 8-00 மணி

(சி-1207)

## நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

A/L 93
தூய
பிரயோக கணிதம்
திரு. கமலசிங்கம்
ஆரம்பம்:
21 - 12 - 91
[சனி 4 மணி]

(சி-1099)

## ECALOM
(மனோகரா சந்தி)

A/L 1993
ஆரம்பம்:
23-12-1991

பௌதிகவியல் — உதயன்
இணைக்கியல் — சௌந்தி
அளவையியல் — விக்கி
வர்த்தகம் — பசில்

வகுப்புகள் யாவும் முன்னரே அறிவித்தது போல் 23 - 12 - 1991 8 மணிக்கு நடைபெறும்.

(சி-1209)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21.12.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org